
அமர்வு 3:

**எமது பலவிதமான அடையாளங்கள்**

# ‘முன்னோக்கி ஒரு அடி’

அறிக்கைகள் மற்றும் எழுத்து அட்டைகள்

-- இலங்கை/பூட்டான




THE LOCAL
CHANGEMAKERS
COURSE

# அறிக்கைகள் மற்றும் எழுத்து அட்டைகள் இந்தியா/நேபாளம்

‘முன்னோக்கி ஒரு அடி’ என்ற பயிற்சியினை நீங்கள் செய்யும்போது (உள்ளூர் மட்ட மாற்றமுண்டாக்குநர் பயற்சி நெறியின் அமர்வு 3 இல் காணப்படும்), இந்த அட்டைகள் மற்றும் அறிக்கைகள் இலங்கை மற்றும் பூட்டான் சூழல்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன.எக் கதாபாத்திரங்கள் மற்றும் கூற்றுக்களைத் தெரிவு செய்வது மற்றும் அவற்றை எவ்வாறு உங்களுடைய குழுவின் குறிப்பான சூழமைவிற்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்ளல் என்பது தொடர்பாக கீழ்வரும் வழிகாட்டலினைப் பயன்படுத்துங்கள்.

## கூற்றுக்கள்

### கூற்றுக்களைத் தெரிவு செய்வதற்கான வழிகாட்டல்

உங்களுக்கு 12-15 கூற்றுக்கள் தேவைப்படும். நீங்கள் தெரிவு செய்வதற்காக 30 கூற்றுக்களைக் கொண்டுள்ள பட்டியலொன்று தரப்பட்டுள்ளது. கூற்றுக்கள் பின்வரும் வகைப்பாடுகளிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ளன:

- சமூக மதிப்பு மற்றும் தனிப்பட்ட நம்பிக்கை
- தெரிவுகளை செய்வதற்கான இயலுமை
- பொருள்சார் ஆதரவு மற்றும் பாதுகாப்பு
- பாரபட்சம் அல்லது வன்முறையினால் பாதிக்கப்படக்கூடிய தன்மை
- உங்களுடைய மதம் அல்லது நம்பிக்கையினைக் கொண்டிருப்பதற்கான மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சுதந்திரம்

உங்களுடைய சூழமைவிற்கு மிகப் பொருத்தமானதென நீங்கள் நினைக்கின்ற சூழ்நிலைக்காட்சிகளை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு வகைப்பாட்டிலிருந்தும் குறைந்தது 2 கூற்றுக்களையேனும் தெரிவு செய்யுங்கள். தேவையாயின், இக்கூற்றுக்களை பொருத்தமான முறையில் மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.

| சமூக மதிப்பு மற்றும் தனிப்பட்ட நம்பிக்கை |
|---|
| உங்களுடைய சமூகத்தில் உங்களது மொழி, மதம் மற்றும் கலாசாரம் என்பன மதிக்கப்படுகின்றன. |
| உங்களுடைய அபிப்பிராயங்கள் கவனத்திலெடுக்கப்படுகின்றன மற்றும் உங்களுடைய கருத்துக்கள் செவிமடுக்கப்படுகின்றன மற்றும் அவை உங்களைச் சுற்றியுள்ளவர்களால. |
| உங்களால் பொது இடங்களில் தயக்கமின்றி பேசி உங்களுடைய அபிப்பிராயத்தினை வெளிப்படுத்த முடிகின்றது. |
| நீங்கள் மிக நெருக்கமாக உள்ளவர்களினாலும் மற்றும் பரந்தளவான சமுதாயத்தினாலும் உங்களுடைய தகைமை போற்றப்படுகின்றது மற்றும் அதற்கு மதிப்பளிக்கப்படுகின்றது என உணர்கின்றீர்கள். |
| **தெரிவுகளை செய்வதற்கான இயலுமை** |
| உங்களுடைய குடும்பத்தில் பெரிய கொள்வனவுகளை செய்கின்றபோது தீர்மானமெடுப்பதில் நீங்கள் உள்வாங்கப்படுகின்றீர்கள். |
| எந்தவொரு நபரினதும் சம்மதத்தினை கேளாமல் உங்களால் நண்பர்களை சந்திக்க முடியும் மற்றும் குடும்பத்தை சந்திப்பதற்கான பயணங்களை செய்ய முடியும். |
| உங்களுடைய தெரிவின்படி, உங்களால் பாடசாலைக்கு செல்லமுடியும், படிக்க முடியும் மற்றும் தொழிலொன்றினை செய்ய முடியும். |
| நீங்கள் விரும்புகின்ற ஒரு நபருடன், அவர் வேறு மதத்தைச் சேர்ந்தவராய் இருப்பினும்கூட, நீங்கள் காதல் கொள்ள முடியும். |
| நீங்கள் விரும்பினால், உங்களைச் சுற்றியுள்ளவர்களால் தண்டிக்கப்படுவோமென்ற அச்சமின்றி (உதாரணமாக, உங்களுடைய சமூக வலையமைப்புக்களிலிருந்து புறக்கணிக்கப்படல்) விவாகரத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும். |
| உங்களால் தேசிய மற்றும் உள்ளூர் தேர்தல்களில் வாக்களிக்க முடியும். |
| உங்களால் நீங்கள் விரும்புகின்ற பொழுதுபோக்குகளை கொண்டிருக்க முடியும், விரும்புகின்ற விளையாட்டுக்களை விளையாட முடியும், விரும்புகின்ற படங்களைப் பார்க்க முடியும். |
| உங்களுடைய உடல் தொடர்பான முடிவுகளை நீங்கள் எடுக்க முடியும்- உதாரணமாக உங்களுக்கு எத்தனை பிள்ளைகள் வேண்டும் மற்றும் எப்போது வேண்டும். |

| பொருள்சார் ஆதரவு மற்றும் பாதுகாப்பு |
|---|
| நீங்களும் உங்களுடைய குடும்பமும் இயற்கை அனர்த்தங்களால் பாதிப்படைவதில்லை. |
| உங்களுக்கு சுகவீனம் அல்லது தொழிலின்மை ஆகிய பிரச்சினைகள் ஏற்படுகின்றபோது, உங்களுக்கு மருத்துவ பராமரிப்பு மற்றும் சமூக நன்மைகள்/ பாதுகாப்பு வலைக்குரிய போதுமான அணுகுதல் உண்டு. |
| உங்களால் உங்களுடைய பிள்ளைகள் ஆரோக்கியமாக வளர்வதற்கு தேவையானவற்றை அவர்களுக்கு கொடுக்க முடியுமென்பதுடன் நீங்கள் அவர்களது எதிர்காலம் குறித்து பயப்படவில்லை. |
| உங்களுக்கேதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் மற்றும் உதவிக்காக எங்கே செல்ல வேண்டுமென உங்களுக்கு தெரியும். |
| நீங்கள் விரும்பியவாறு உங்கள் தொழிலில் முன்னேற முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்கள். |
| எயிட்ஸ் மற்றும் ஏனைய பாலியல் தொற்று நோய்கள் தொடர்பான ஏராளமானத் தகவல்களுக்கான அணுகுதல் உங்களுக்கு உண்டு. |
| **பாரபட்சம் மற்றும் வன்முறையினால் பாதிக்கப்படக்கூடியத் தன்மை** |
| உங்களுடைய இனம், சாதி அல்லது மதம் காரணமாக நீங்கள் பாரபட்சப்படுத்தப்படுவதாக நீங்கள் எப்போதுமே உணர்ந்ததில்லை. |
| நீங்கள் பொலிஸாரால் தடுத்து நிறுத்தப்படுவது தொடர்பில் பயப்படுவதில்லை மற்றும் நீங்கள் ஒருபோதும் கைது செய்யப்பட்டதில்லை. |
| நீங்கள் வீட்டிலும் தெருவிலும் பாதுகாப்பாக உணர்கின்றீர்கள் என்பதுடன் துஷ்பிரயோகம், பாலியல் தொந்தரவு மற்றும் வீதி தொந்தரவு பற்றி நீங்கள் கவலை படுவதில்லை. |
| உங்களைப் போன்ற நபர்கள் சமூகத்தின் நல்ல உறுப்பினர்கள் என்பதுடன் அவர்களால் எதனையும் சாதிக்க முடியுமென்ற உத்வேகத்தினை பாடசாலை பாடநூல்கள் உங்களுக்கு வழங்குகின்றன/வழங்கின. |
| உங்களுடைய மத, இன அல்லது வேறு அடையாளம் ஊடகங்களில் சாதகமான முறையில் சித்தரிக்கப்படுகின்றது. |
| புதிய அடையாள அட்டையொன்றினைப் பெற்றுக் கொள்வதில் உங்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லை என்பதுடன் உங்களுடைய அடையாள அட்டையினைப் பயன்படுத்தலானது பாரபட்சத்திற்கு வழிவகுக்காது. |
| **உங்களுடைய மதத்தைக் கொண்டிருப்பதற்கான மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான சுதந்திரம்** |
| மிக முக்கியமான மத பண்டிகைகளை நீங்கள் உங்களுக்கு நெருக்கமான நபர்களுடன் மற்றும் பகிரங்கமாகக் கொண்டாட முடியும். |
| புனித யாத்திரையொன்றிற்காக, சக விசுவாசிகளை சந்திப்பதற்காக அல்லது சர்வதேச கருத்தரங்கொன்றில் பங்குபற்றுவதற்காக நீங்கள் வெளிநாட்டிற்கு பயணிக்க முடியும். |
| நீங்கள் பொது இடங்களில் வெளிப்படையாக பிரார்த்தனை செய்யலாம் மற்றும் உங்களது வழிபாட்டிடத்திற்கு செல்லலாம். |
| நீங்கள் உரியவராயுள்ள மத சமுதாயமானது அதிகாரிகளிடமிருந்து அல்லது சமூகத்திலுள்ள ஏனைய குழுக்களிடமிருந்து பிச்சினைகளை சந்திக்காமல், வழிபாட்டிடமொன்றினைக் கட்டமுடியும் அல்லது திறக்க முடியும். |
| பழிவாங்கல்கள் குறித்த பயமின்றி உலகம் தொடர்பான உங்களது கருத்துக்களை உங்கள் குடும்பம், நண்பர்கள் மற்றும் உடன் பணிபுரிபவர்களுடன் வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள முடியும் மற்றும் அதனைப் பற்றி சமூக ஊடகங்களில் பேச முடியும். |
| உங்களுடைய மதம் அல்லது நம்பிக்கை பற்றிய தகவல்களை சுதந்திரமாகப் பெற்றுக் கொள்வதற்கு, வாசிப்பதற்கு மற்றும் பகிர்வதற்கு உங்களால் முடியும். |
| நீங்கள் வேறு ஒரு மதத்திற்கு மாறினால் உங்களுடைய நண்பர்களை அல்லது சமூக அந்தஸ்த்தினை நீங்கள் இழக்க மாட்டீர்கள். |

# கதாபாத்திர அட்டைகள்

## கதாபாத்திரங்களைத் தெரிவு செய்துக் கொள்வதற்கான மற்றும் மாற்றியமைத்துக் கொள்வதற்கான வழிகாட்டல

ஒரு பங்குபற்றுநருக்கு 1 கதாபாத்திரம் உங்களுக்கு தேவைப்படும். தொடரும் பக்கங்களில் முன்மொழியப்பட்டுள்ள கதாபாத்திரங்கள் 5 வகைப்பாடுகளின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளன:

- சமூக, அரசியல் அல்லது மத அதிகாரங்களுடனும் மற்றும்/அல்லது ஒப்பீட்டளவில் குறைவான பாதிக்கப்படக்கூடியத் தன்மைகளையும் கொண்டுள்ள கதாபாத்திரங்கள்.
- மதம்/நம்பிக்கை மற்றும் பால்நிலையின் ஊடறுக்கின்றதன்மையுடன் தொடர்புற்றுள்ள பாதிக்கப்படக்கூடியத் தன்மைகளைக் கொண்டுள்ள கதாபாத்திரங்கள்.
- மத அல்லது நம்பிக்கைக்கான அடையாளத்துடன் தொடர்புடைய பாதிக்கப்படத்தன்மைகளை வலியுறுத்திக்காட்டுகின்ற கதாபாத்திரங்கள்.
- வகுப்பு/சாதி அல்லது புலம்பெயர் அந்தஸ்த்தினால் பாதிக்கப்படக்கூடியத் தன்மைகளைக் கொண்டுள்ள கதாபாத்திரங்கள்.
- ஏனைய கதாபாத்திரங்கள்.

**கதாபாத்திரங்களை சேர்த்துக் கொள்ளுங்கள் அல்லது நீக்குங்கள்**

வழங்கப்பட்டுள்ள கதாபாத்திரங்களின் பட்டியல் தொடர்பாக சிந்தியுங்கள்:

- உங்களுடைய சூழமைவிற்கு பொருந்தாத கதாபாத்திரங்கள் காணப்படுகின்றனவா- அவற்றை நீக்குங்கள் அலலது அவற்றைப் பொருத்தமானவையாக மாற்றியமைத்துக் கொள்ளுங்கள்.
- உங்களுடைய சூழமைவிற்கு மிக முக்கியமான ஏதேனும் கதாபாத்திரங்கள் தவறவிடப்பட்டுள்ளனவா, உதாரணமாக, குறிப்பிட்ட மத, இன அல்லது சமூகக் குழுவின் நபரொருவர்? இவற்றை சேர்த்துக் கொள்ளுங்கள், கதாபாத்திரத்தின் விவரணத்தினை குறுகியதாக வைத்துக் கொள்ளுங்கள். (குறிப்பு: அதிகமானவற்றை சேர்க்க வேண்டாம்! உங்களுக்கு பெரிய குழுவொன்று இல்லாவிடின், நீங்கள் உங்கள் குழுவின் அளவிற்கேற்ப கதாபாத்திரங்களை நீக்க வேண்டியேற்படும்)

**கதாபாத்திரங்களைத் தெரிவுசெய்யுங்கள்**

- ஒவ்வொரு வகைப்பாட்டின்கீழும் நீங்கள் கதாபாத்திரங்களை உட்சேர்த்துள்ளீர்கள் என்பதனை உறுதிப்படுத்துங்கள்
- ஆறில் ஒன்றினை விட மேற்பட்ட கதாபாத்திரங்கள் அதிகாரத்தினைக் கொண்டுள்ள வகைப்பாட்டிலிருந்து தெரிவு செய்யப்படக்கூடாது.
- உங்களுடைய சூழமைவில் மிகப் பொருத்தமானதாக உள்ள மற்றும் வலியுறுத்திக்காட்டுவது அவசியமானதாக உள்ள இலகுவில் பாதிக்கப்படுகின்றதன்மைகளின் அடிப்படையில் ஏனைய வகைப்பாடுகளிலிருந்து எத்தனை/எக் கதாபாத்திரங்களை தெரிவு செய்வதென்பதனை தீர்மானியுங்கள்.
- பல்வேறுபட்ட மத/நம்பிக்கைக்கான அடையாளங்களை உள்ளடக்குங்கள் மற்றும் கதாபாத்திரங்களில் ஆண் மற்றும் பெண் சமநிலையைப் பேணுங்கள்.

**விருப்பமாயின் கதாபாத்திரங்களைத் தேவைக்கேற்ப வடிவமைத்துக் கொள்ளுங்கள்**

கதாபாத்திரங்களை உங்களுடைய நாட்டின் சூழமைவிற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்வதற்கு நீங்கள் சிறிது நேரத்தினை செலவிட்டால், பங்குபற்றுநர்களால் அக்கதாபாத்திரங்கள் தொடர்பில் முழுமையான ஈடுபாட்டுடன் செயற்பட முடியும். உதாரணமாக, கதாபாத்திரம் வாழ்கின்ற இடங்கள், அவர்கள் பணி புரிகின்ற அரச நிறுவனங்களின் பெயர்கள் என்பனவற்றைக் குறிப்பாக குறிக்கின்ற வகையில் கதாபாத்திரங்களை மாற்றியமைத்துக் கொள்ள முடியும். எனினும், இப்பயிற்சியினை செய்வதற்கு இது இன்றியமையாதது அல்ல.

## பிரிவு

சக்தி மற்றும்/அல்லது ஒப்பீட்டளவில் குறைவான பாதிக்கப்படக்கூடியத் தன்மை உள்ள கதாபாத்திரங்கள்

நீங்கள் பௌத்த பீடத்தின் முன்னணி உறுப்பினர் மற்றும் உங்களை பௌத்தத்தின் பாதுகாவலராக பார்க்கிறீர்கள்.

நீங்கள் ஒரு மேற்கத்திய பெண், தலைநகரில் உள்ள ஒரு அரசு சாரா அபிவிருத்தி நிறுவனத்தில் பணிபுரிகிறீர்கள.

நீங்கள் ஒரு சிறிய நகரத்தில் ஒரு மடாலயத்தில் வசிக்கும் ஒரு பௌத்த கன்னியாஸ்திரி.

நீங்கள் தொழிநுட்ப துறையில் நல்ல வேலையில் இருக்கும் ஒரு பக்தியுள்ள, நடுத்தர வர்க்கபௌத்த மதத்தைச் சார்ந்தவர்.

நீங்கள் தற்போது அரசாங்கத்தில் உள்ள கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பாராளுமன்ற உறுப்பினர்.

நீங்கள் ஒரு உயர் ராணுவ அதிகாரி.

## பிரிவு

மதம் மற்றும் பாலினம் தொடர்பான பாதிக்கப்படக்கூடியத் தன்மை உள்ள கதாபாத்திரங்கள்.

நீங்கள் கணவனால் கடுமையாகத் தாக்கப்பட்ட ஒரு பௌத்த பெண்.

நீங்கள் கணவனால் கடுமையாகத் தாக்கப்பட்ட ஒரு இந்து பெண்.

நீங்கள் 16 வயது பௌத்த பெண். உங்கள் பெற்றோர் பக்தியுள்ள பழமைவாதிகள், ஒரு சிறிய நகரத்தில் வசிக்கிறீர்கள். நீங்கள் இளம் வயதில் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை மாறாக நீங்கள் பல்கலைக்கழகம் செல்ல விரும்புகிறீர்கள்,

நீங்கள் 16 வயது இந்து பெண். உங்கள் பெற்றோர் பக்தியுள்ள பழமைவாதிகள், ஒரு சிறிய நகரத்தில் வசிக்கிறீர்கள். நீங்கள் இளம் வயதில் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை மாறாக நீங்கள் பல்கலைக்கழகம் செல்ல விரும்புகிறீர்கள்,

நீங்கள் ஒரு தார்மீக பழமைவாத கிறிஸ்தவ சமூகத்தில் வாழும் வேலையில்லாத ஒற்றைத் தாய்.

நீங்கள் ஒரு முஸ்லீம் பெண்ணுடன் நிச்சயதார்த்தம் செய்து கொண்ட பௌத்த ஆண். இரு வீட்டாரும் திருமணத்தை எதிர்க்கின்றனர்.

நீங்கள் காதலில் விழுந்த இளம் முஸ்லிம் பெண்.

நீங்கள் ஒரு பௌத்த திருநங்கை. நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு தெரிவிக்க விரும்புகிறீர்கள்.

## பிரிவு

மதம் அல்லது நம்பிக்கை அடையாளத்துடன் தொடர்புடைய பாதிக்கப்படக்கூடியத் தன்மை உள்ள கதாபாத்திரங்கள்.

நீங்கள் பௌத்தத்தில் இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய ஒரு ஆண்.

நீங்கள் பௌத்த மதத்திற்கு மாறிய தாழ்த்தப்பட்ட இந்துப் பெண்.

நீங்கள் ஒரு நாத்திகர் மற்றும் தேசத்தின் வாழ்க்கையில் மத அதிகாரிகள் வகிக்கும் பங்கை எதிர்க்கிறீர்கள். உங்கள் குடும்பம் பௌத்த பக்தர்கள்.

நீங்கள் ஒரு கிராமப்புறத்தில் ஒரு சிறிய கிராமத்தில் ஒரு கிறிஸ்தவ போதகர். பெரும்பான்மை சமூகத்தின் சில உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளின் விரோதப் போக்கைப் பற்றி நீங்கள் கவலைப்படுகிறீர்கள்.

நீங்கள் ஹிஜாப் அணிந்த முஸ்லிம் பெண். கோவிட் தொற்றுநோயால் உங்கள் தாயை இழந்தீர்கள். அவள் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்பட்டாள். (இலங்கை)

நீங்கள் ஒரு உள்ளூர் மசூதியில் முஸீன் (தொழுகைக்கான அழைப்பை அறிவிக்கும் நபர்.)

நீங்கள் ஒரு வேடுவர் மற்றும் உங்கள் பாரம்பரிய மதத்தை பின்பற்றுபவர். நீங்கள் படிப்பதற்காக தலைநகருக்குச் சென்றுள்ளீர்கள். (இலங்கை)

நீங்கள் பௌத்த மதத்துடன் ஒரு பாரம்பரிய ஆன்மிக மதத்தைப் பின்பற்றுகிறீர்கள். (பூட்டான்)

## பிரிவு

வர்க்கம், சாதி, புலம்பெயர்ந்த நிலை அல்லது பிற காரணிகள் தொடர்பான பாதிக்கப்படக்கூடியத் தன்மை கொண்ட கதாபாத்திரங்கள்.

நீங்கள் ஒரு தமிழ்/பூடானிய-நேபாளி பெண், கிராமப்புறத்தில் உள்ள உள்ளூர் பண்ணைகளில் தினசரி கூலி வேலை செய்கிறீர்கள். நீங்கள் மூன்று குழந்தைகள் உள்ள ஒரு விதவை.

நீங்கள் தலைநகரில் தெருக்களில் வசிக்கும் 12 வயது சிறுவன்.

நீங்கள் ஒரு கிராமப்புறத்தில் வாழும் ஒரு வயதான, ஊனமுற்ற பௌத்த மனிதர். உங்கள் மகன் தனது குடும்பத்துடன் ஒரு பெரிய நகரத்திற்குச் குடிபெயர்கிறார்.

நீங்கள் மூன்று குழந்தைகளுக்கு ஒரு கிறிஸ்தவ தாய். நிலச்சரிவு/வெள்ளம் காரணமாக உங்கள் வீட்டையும் உங்கள் அறுவடையையும் இழந்துவிட்டீர்கள்.

நீங்கள் , படிக்காத ஒரு சிறிய நகரத்தில் நிலையான தங்குமிடம் இல்லாமல்.தினசரி கூலித் தொழில் செய்யும் ஒரு ஆண்.

நீங்கள் ஒரு இந்து அண்டை நாட்டிலிருந்து புலம்பெயர்ந்த தொழிலாளி - நீங்கள் மிகக் குறைந்த ஊதியத்தில் வேலை செய்கிறீர்கள், சில சமயங்களில் உங்களுக்கு ஊதியம் கிடைப்பதில்லை.

## பிரிவு

ஏனைய கதாபாத்திரங்கள்.

நீங்கள் ஒரு சிறு வியாபாரி மற்றும் பொதுபல சேனாவின் ஆதரவாளர் மற்றும் இஸ்லாத்திற்கு எதிரான வன்முறை ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ளீர்கள். (இலங்கை)

நீங்கள் உள்நாட்டுப் போரில் போராடிய தமிழர். நீங்கள் போருக்கு பின்னரான மனஉளைச்சலால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் மற்றும் போருக்குப் பிறகு உங்கள் வாழ்க்கை கடினமானதாக மாறியுள்ளது. (இலங்கை)

(இங்கே மேலதிக கதாபாத்திரங்களை சேர்க்கவும்.)

(இங்கே மேலதிக கதாபாத்திரங்களை சேர்க்கவும்.)

(இங்கே மேலதிக கதாபாத்திரங்களை சேர்க்கவும்.)

(இங்கே மேலதிக கதாபாத்திரங்களை சேர்க்கவும்.)

(இங்கே மேலதிக கதாபாத்திரங்களை சேர்க்கவும்.)